# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு துப்புரவு பணியாளர்களின் வருகையினை பதிவு செய்ய BIO-METRIC மிஷன் 10 எண்ணம் வாங்குவதற்கு 26.03.2018—ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டுள்ள படி 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீவிக்னேஷ் எலக்ட்ரானிக்ஸ்<br>26, வஞ்சியாதித்தன் புதுத்தெரு<br>நாகர்கோவில் | மிஷன் — 1—ன் விலை | ரூ.25,500/— |
| 2 | ரம்யா சிஸ்டம்ஸ்<br>46, நாஞ்சில் நகர் — ராமன்புதூர்<br>நாகர்கோவில் | மிஷன் — 1—ன் விலை | ரூ.26,500/— |
| 3 | ரவி சிஸ்டம்ஸ்<br>26, தளவாய்த்தெரு<br>மீனாட்சிபுரம், நாகர்கோவில் | மிஷன் — 1—ன் விலை | ரூ.27,500/— |

மேற்கண்டுள்ள 3 விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் கண்டுள்ள ஸ்ரீவிக்னேஷ் எலக்ட்ரானிக்ஸ் — நிறுவனத்தின் விலைப்புள்ளி Bio-Metric ஒன்றுக்கு ரூ.25,500/— என கேட்கப்பட்டுள்ளது அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று 10 எண்ணம் Bio-Metric மிஷன் சப்ளை செய்ய உத்தரவு வழங்கப்பட்டதை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.4391/2018/எச்1

**தீர்மானம் எண். 136— அங்கீகரிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்கு உட்பட்ட 13 வரி வசூல் மையங்களில் தினசரி வசூல் ஆகும் தொகை, இந்நகராட்சி கருவூலத்தில் பெறப்படுகிறது. தற்பொழுது கருவூலத்தில் பயன்படுத்தும் பணம் எண்ணும் இயந்திரம் செயல்திறன் குறைந்துவுள்ளது. மேலும் புதிய 2000, 50, 10 ஆகிய ரூபாய் கள்ளதனம் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது, இதனால் தினசரி பணிகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகையால் Phoenix Counting Machine —ன் அங்கீகரிக்கப்பட்ட மொத்த விற்பனையாளர் ஆன Loyal Systems Coimbatore நிறுவனத்திடம் இருந்து Cash Counting Machine வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/—க்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.004574/2018/பி2

**தீர்மானம் எண். 137— அங்கீகரிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ்கண்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/2139/2017 நாள்.01.02.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 09.03.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| **வ.எண்** | **மதிப்பீட்டு எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்)** | **ஒப்பந்தக்காரர்கள் விபரம்** | **ஒப்பந்த விகிதம்** | | **கூடுதல் வைப்புத் தொகை** |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **குறைவு** | **அதிகம்** | |
| 1 | 156/2017–2018 | நாகர்கோவில் நகராட்சி – கார்த்திகை வடலி அருள்மிகு முத்தாரம்மன் திருகோவில் பக்கத்தில் சமுதாய நலக்கூடம் அமைத்தல் | 10.00 | பி.பால்பாண்டியன் | 18.00 | | |
| | | | | கே. மணிகண்டன் | 18.00 | | |
| | | | | **எஸ்.றி. மணிகண்டன்** | **14.99** | | **99550/–** |
| | | | | டி.ஐய்யாபழம் | 14.85 | | |
| | | | | ஜே. ரதீஷ் | 13.00 | | |
| | | | | ஆர்.மேகநாதன் | 12.94 | | |
| 2 | 157/2017–2018 | நாகர்கோவில் நகராட்சி – பார்வதிபுரம் கே.பி.ரோடு கோலப்ப கோனார் தெருவில் தரைதளம் மற்றும் கழிவு நீரோடை அமைத்தல் | 1.50 | **பி.செல்வமணி** | **29.17** | | **25900/–** |
| | | | | எட்வின் | 23.81 | | |
| | | | | எம்.ஹெப்சிபாய் | 22.81 | | |
| | | | | டி.ஐய்யாபழம் | 12.33 | | |
| | | | | ஜே. ரதீஷ் | 7.57 | | |
| | | | | கே.செல்வன் | 4.42 | | |
| | | | | எஸ்.மரிய செல்வகுமார் | 2.49 | | |
| 3 | 158/2017–2018 | நாகர்கோவில் நகராட்சி – எறும்பு காடு முத்தாரம்மன் கோவில் வளாகத்தின் | 1.00 | **Solariz Regen Technologies Private Limited** | **28.06** | | **14100/–** |
| | | | | பி.செல்வமணி | 25.85 | | |
| | | | | எம்.ஹெப்சிபாய் | 24.99 | | |
| | | | | கே. மணிகண்டன் | 21.00 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முகப்பு வாயில் அருகில் இரண்டு சோலார் விளக்குகள் அமைத்தல் | | ஷா ஜெகன்லால் ஜெயந்தி லால் ஜெயின் | 10.82 | | |
| | | | | MAS Solar System Private Limited | 6.41 | | |
| | | | | மாலனி லைட்டிங கம்பெனி | 4.81 | | |
| 4 | 159/2017–2018 | வார்டு எண்.19– நாகர்கோவில் நகராட்சி – புத்தன் குடியிருப்பு ஆயிஷா அவன்யூ தெருவிற்கு கால்வாய் மற்றும் அலங்கார தரை ஓடு அமைத்தல் | 6.00 | **றி.துரை** | **25.30** | | **78420/–** |
| | | | | பி.பால்பாண்டியன் | 25.04 | | |
| | | | | எம்.ஹெப்சிபாய் | 24.99 | | |
| | | | | ஆர்.குமார் | 19.29 | | |
| | | | | பி.செல்வமணி | 18.27 | | |
| | | | | டி.ஐய்யாபழம் | 17.21 | | |
| | | | | ஜே. ரதீஷ் | 16.05 | | |
| | | | | கே.செல்வன் | 14.47 | | |
| | | | | பி.முரளிதரன் | 14.39 | | |
| | | | | டி.அழகேசன் | 11.85 | | |
| | | | | எஸ்.மரிய செல்வ குமார் | 11.05 | | |
| 5 | 160/2017–2018 | வார்டு எண். 37–ல் பைத்துமால் நகரில் அலங்கார தடை ஓடு பதித்தல் | 2.00 | **றி.துரை** | **25.04** | | **27910/–** |
| | | | | பி.பாபு | 25.03 | | |
| | | | | எம்.ஹெப்சிபாய் | 24.04 | | |
| | | | | ஆர்.குமார் | 20.94 | | |
| | | | | டி.ஐய்யாபழம் | 19.55 | | |
| | | | | ஜே. ரதீஷ் | 19.04 | | |
| | | | | பி.செல்வமணி | 17.17 | | |
| | | | | கே.செல்வன் | 16.73 | | |
| | | | | பி.முரளிதரன் | 12.54 | | |
| | | | | டி.அழகேசன் | 11.12 | | |
| | | | | எஸ்.மரிய செல்வ குமார் | 8.05 | | |
| 6 | 161/2017–2018 | நாகர்கோவில் நகராட்சி – கீழ வண்ணான்விளை | 5.00 | **கே.மணிகண்டன்** | **25.00** | | **62900/–** |
| | | | | எம்.ஹெப்சிபாய் | 24.99 | | |
| | | | | பி.பாபு | 24.99 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஊரில் அமைந்துள்ள ஆடிட்டோரியத்தின் முன் உள்ள மைதானத்தில் மேற்கூரை அமைத்தல் | | றி.துரை | 24.99 | | |
| | | | | ஜே. ரதீஷ் | 24.99 | | |
| | | | | எஸ்.பால்நேசமணி | 24.99 | | |
| | | | | ஆர்.மேகநாதன் | 24.98 | | |
| | | | | ஆர்.குமார் | 23.00 | | |
| | | | | எட்வின் | 21.10 | | |
| | | | | டி.ஐய்யாபழம் | 17.40 | | |
| | | | | டி.அழகேசன் | 16.80 | | |
| | | | | கே.செல்வன் | 10.75 | | |
| | | | | எஸ்.மரிய செல்வ குமார் | 5.00 | | |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண். (1) –ல் குறிப்பிட்ட பணிக்கு திரு.பி.பால்பாண்டியன் மற்றும் திரு.கே.மணிகண்டன் ஒரே ஒப்பந்த விகிதத்தில் (–18.00%) கொடுத்துள்ளமையால் இருவரின் ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி நீக்கம் செய்து அதற்கு அடுத்தாற்போல் குறைவாக கொடுத்த திரு.எஸ்.டி. மணிகண்டன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று கூடுதல் வைப்புத்தொகை ரூ.99,550/– செலுத்திடவும் வரிசை எண் (2) முதல் (6) வரை குறிப்பிட்ட பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அதற்கு எதிரே குறிப்பிட்ட கூடுதல் வைப்பு தொகைகளை செலுத்திய பின்னர் பணி உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.7072/2017/இ3

**தீர்மானம் எண். 138– அங்கீகரிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சி பகுதியில் அடல் நகரிய சீர்திருத்த திட்டம் (AMRUT) 2017–2020–ன் கீழ் முக்கடல் அணையில் நகராட்சி விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய பூங்கா அமைத்திட நகராட்சி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.3642/2016/IHSDP-3 நாள். 22.01.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி கடந்த 28.02.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.வி.ஜோசப் அருள் ராஜ் | மதிப்பீட்டைவிட 17.80% குறைவு |
| 2 | திரு.பி.தங்கசுவாமி | மதிப்பீட்டைவிட 13.20% குறைவு |
| 3 | திரு.எம்.வெட்டிவேலன் | மதிப்பீட்டைவிட 15.00% குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வி.ஜோசப் அருள்ராஜ் 17.80% மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்புத் தொகை ரூ.7,37,280/–னை செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.456/2017–2018/CE

**தீர்மானம் எண். 139– அங்கீகரிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சி பகுதியில் அடல் நகரிய சீர்திருத்த திட்டம் (AMRUT) 2017–2020–ன் கீழ் புளியடியில் விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய பூங்கா அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.3642/2016/IHSDP-3 நாள். 22.01.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி கடந்த 28.02.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம். வெட்டிவேலன் | மதிப்பீட்டைவிட 15.00% குறைவு |
| 2 | திரு.பி.தங்கசுவாமி | மதிப்பீட்டைவிட 13.20% குறைவு |
| 3 | திரு.வி.ஜோசப் அருள் ராஜ் | மதிப்பீட்டைவிட 18.50% குறைவு |
| 4 | திரு. என்.சபேசன் | மதிப்பீட்டைவிட 14.99% குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வி.ஜோசப் அருள்ராஜ் 18.50% மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்புத் தொகை ரூ.7,17,750/–னை செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.455/2017–2018/CE

**தீர்மானம் எண். 140– அங்கீகரிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் இருந்து கிருஷ்ணன் கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் 800mm குழாயில் முக்கடல் அணைக்கு செல்லும் சாலையில் இரு இடங்களிலும் சந்திரன் ஹாலோ பிளாக் கம்பெனி அருகில் ஒரு இடத்திலும் பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் அதிகளவில் விரயம் ஆவதால் ரூ.1,05,000/– மதிப்பீட்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15–ன் கீழ் திரு.S.முரளீதரன் என்பவர் மூலம் பழுதுகள் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.4121/2018/இ3

**தீர்மானம் எண். 141– அங்கீகரிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையிலிருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் 800mm குழாயில் அரசன்குழி பிரதான சாலை, இறச்சகுளம் (திருமண மண்டபம் பின்புறம்) மற்றும் தங்கம் நகர் ஆகிய இடங்களில் பழுது ஏற்பட்டு குடிநீர் விரயம் ஆவதை தடுப்பதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு –15–ன் கீழ் ரூ.1,10,000/– மதிப்பீட்டில் திரு.A.ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் என்பவர் மூலம் பழுதுகள் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.4123/2018/இ3

**தீர்மானம் எண். 142– அங்கீகரிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி வார்டு எண்.39, அம்மன் கோவில் தெருவில் பழுதான 100 மீட்டர் குடிநீர் குழாயினை ரூ.32,000/– மதிப்பீட்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் திரு.ற்றி. மணிகண்டன் ஒப்பந்ததாரர் மூலம் மாற்றி அமைக்கவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.3244/2018/இ3

**தீர்மானம் எண். 143– அங்கீகரிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்கு 2018–2019–ம் நிதி ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், இரசீதுகள் முதலியவற்றை அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்.4751/2018/பி2

**தீர்மானம் எண். 144– அங்கீகரிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சிக்குட்பட்ட சுப்பையார் குளக்கரையில் உள்ள கழிவுநீர் பைப் உடைந்துள்ளதால் அதனை சரி செய்யவும், Filter house –லிருந்து வரும் உபரி நீரை 315mm pvc pipe மூலம் குளத்திற்கு கொண்டு வருவதற்கும் மதிப்பீடு ரூ.7.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவும் வழங்கப்பட்டது. மேற்படி வேலை செய்ய துவங்கும்போது புதிதாக Open drain தான் போடவேண்டும் என்று அப்பகுதி மக்கள் மேற்படி வேலையினை செய்யவிடாமல் தடுத்து நிறுத்திவிட்டனர். மேற்படி குளம் PWD குளம் ஆனதால் PWD மூலம் MLA நிதியின் கீழ் பக்கச்சுவர் பராமரிப்பு செய்து முள்வேலி அமைக்கப்பட்டது. தற்சமயம் UGD பணிகள் நடைபெற்று வருவதால் அப்பகுதியில் கழிவு நிர் ஓடை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே தற்சமயம் அப்பகுதியில் உள்ள கழிவு நீரை அகற்ற 2 leach pit அமைத்து motor வைத்து அகற்ற தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.65,000/–க்கு அனுமதியும், சுப்பையார் குளம் பாதுகாப்பு இயக்க சமூக சேவகர், ஜோனி என்பவரால் வழக்கு தொடரப்பட்டு இருப்பதால் நிர்வாக நலன் கருதி அவசர அவசரமாக மேற்படி வேலை செய்ய வேண்டியுள்ளதால் நகராட்சிகள் சட்டம் எண்.1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி வேலையினைதிரு.S.செல்லம், ஒப்பந்ததாரர் மூலம் வேலையினை செய்ய பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.4791/2018/இ1

**தீர்மானம் எண். 145– அங்கீகரிக்கப்பட்டது.**

11. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49, கதவு எண்.71C4/9-1, கீழராமன்புதூர், வரிவிதிப்பு எண்.01421, வரிவிதிப்பாளர் பெயர். உமாதேவி என்பவர் தனது கட்டிடத்திற்கு சொத்துவரி அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து தற்போது மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றம் நாகர்கோவில் O.S.No.54/2018, I.A.No.140/2018 எண்ணிய வழக்கு தொடுத்துள்ளார்.

மேற்படி இவ்வழக்கினை இந்நகராட்சி சார்பாக இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.E.ஹரிஹரன் அவர்கள் ஏற்று நடத்தவும் அதற்கு ஆகும் செலவு கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்.4605/2018/அ9

**தீர்மானம் எண். 146– அங்கீகரிக்கப்பட்டது.**

12. நாகர்கோவில் நகராட்சி ஆணையாளர் – அவர்களை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட நாகர்கோவில் நீதிமன்ற வழக்குகள் (நகரமைப்பு பிரிவு) முன்னாள் வழக்கறிஞர் திரு.நாகராஜன் – அவர்களிடமிருந்து பெறப்பட்டு திரு.ஹரிஹரன் – வழக்கறிஞர் அவர்களிடம் 38 வழக்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அன்னார் Change of vakalath தாக்கல் செய்ய கட்டணம் வழங்க வேண்டும் என நேரில் தெரிவித்தன் பேரில் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் – அவர்களிடம் ஒப்புதல் பெற்று வழக்கிடை செலவுகள் செய்தமைக்கு அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.933/2015/எப்1

**தீர்மானம் எண். 147– அங்கீகரிக்கப்பட்டது.**

13. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளும் 16 மண்டலங்களாக (DIVISIONS) பிரிக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் நகராட்சியின் 52 வார்டுகளிலும் ஓடைகளில் வாறுகால் மண் எடுக்கும் பணியும், தனியார் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வார்டுகள் தவிர்த்து ஏனைய 19 வார்டுகளிலும் குப்பைகள் அகற்றும் பணியும் நகராட்சி லாரிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் லாரிகள் பழுது ஏற்பட்டு பணிமனைக்கு சென்றாலோ அல்லது தகுதிச் சான்று பெறுவதற்காக வாகனங்கள் பழுதுகளை சரி செய்ய பணிமனைக்கு சென்றாலோ அன்றாடம் குப்பைகளை சேகரம் செய்வதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதுடன் பொது சுகாதாரத்திலும் பெருமளவு பாதிப்பு ஏற்படுகின்றது. தற்போது TN74L 5167 மற்றும் TN74D199 ஆகிய வாகனங்கள் தகுதிச் சான்று பெறுவதற்காக பணிமனைக்கு சென்றுள்ளதால் சுகாதாரப் பணி மேற்கொள்வதில் மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே தினசரி வாடகைக்கு 1 டிராக்டர் வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவதற்கும் நாளொன்றிற்கான வாடகை 4 நடைகளுக்கு (Trips) ரூ.2900/– ஆகும். மேற்படி பணியினை அரசு நிறுவனமான அக்ரோ சர்வீஸ் (KK DIST AGRO ENGG SERVICE SOCIETY) மூலம் மேலும் 2 மாத காலத்திற்கு மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினங்களுக்கும் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டிடவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.11931/2016/எச்2

**தீர்மானம் எண். 148– அங்கீகரிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சியில் சமுதாய அமைப்பாளராகப் பணியாற்றிய திருமதி.J.ஸ்டார்லிங் லலிதகுமாரி என்பவர் மருத்துவ விடுப்பிலிருக்கும் போது தனது பணியினை ராஜினாமா செய்ய விண்ணப்பித்து, நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி வருவதற்கு முன்பாக 01.06.2016–ல் மரணமடைந்தார் அன்னாரின் கணவர் திரு.அலெக்ஸாண்டர் என்பவர் ஓய்வூதிய பலன்கள் வழங்க கேட்டு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு WP(MD) No.20175/2017–ல் திரு.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கறிஞர் கட்டணம் ரு.7500/– வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.20074/2015/சி1

**தீர்மானம் எண். 149– அங்கீகரிக்கப்பட்டது.**

15. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, எம்.எஸ்.ரோடு, கதவு எண்.460A/5, வரிவிதிப்பு எண்.82164–க்கு வரிவிதிப்பாளர் The Secretary Rural uplift Centre சொத்துவரியிலிருந்து விலக்களிக்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.7737/2018–ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராக திரு.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞர் அவர்களிடம் வழக்கை ஒப்படைக்கவும், அது சம்மந்தமான செலவுகளுக்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.003245/2018/அ2

**தீர்மானம் எண். 150– அங்கீகரிக்கப்பட்டது.**

16. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.XXIII –ல் வடசேரி பேருந்து நிலையத்தின் தென்புறமுள்ள நிலையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள 60'அகலமுள்ள D-D திட்ட சாலையையும், டென்னிசன் சாலையையும் இணைக்கும் 40' அடி அகலமுள்ள F.F எண்ணிட்ட நிலையில் 75 மேல் நில உரிமையாளர்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட திட்டச்சாலை உள்ளது. மேற்படி திட்டச்சாலை நில உரிமையாளர்களால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டச்சாலையின் வடக்கு எல்லையில் புல எண்.E11/9–2 –ன் கிழக்கு எல்லையை ஒட்டியும் புல எண். E11/9–5 அரசு புறம்போக்கு ஓடையிலும் திட்டசாலை அமைகிறது. இந்நிலையில் திரு.டேவிட் பெஞ்சமின் என்பவர் சாலையை சேதப்படுத்தி விட்டு திட்டசாலை அமையும் புல எண். E11/9–2 –ல் அதன் அனுபவத்தை குறுக்கிடக்கூடாது என சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் 1. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள், 2. நகராட்சி ஆணையாளர், 3. நகரமைப்பு அலுவலர், 4. திரு.கெபின்ஜாய் நகரமைப்பு ஆய்வர் மற்றும் இருவரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண்.WP(MD) 22817/2017 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு நகராட்சி மதுரை வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும் வழக்கிடை செலவுகள் மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.15516/2017/எப்1

**தீர்மானம் எண். 151– அங்கீகரிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சிக்கு சொந்தமான வட்டவிளையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட பொதுக்கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு பெறுவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர் நோக்கி மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.28,510/–னை மின்சார வாரியத்திற்கு செலுத்தியதும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.219/2016–17/இ4

**தீர்மானம் எண். 152– அங்கீகரிக்கப்பட்டது.**

18. நாகர்கோவில் நகராட்சி 52 வார்டுகளை கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும் இதில் 19 வார்டுகளின் துப்புரவு பணியானது நகராட்சி மூலமாகவும் மீதமுள்ள 33 வார்டுகளின் துப்புரவு பணியானது SRP Clean Enviro Pvt.Ltd, மூலமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார்மயமாக்கப்பட்ட 33 வார்டுகளில் மேற்படி நிறுவனமானது 12.12.2013 முதல் அனைத்து துப்புரவு பணியினையும் முறையே 258 துப்புரவு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்தல், 25 ஆட்டோ மற்றும் 2 டம்பர் பிளைசர், 3 டிம்போ, 2 காம்பேக்டர் ஆகிய வாகனங்கள் மூலமாக சேகரித்து உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லுதல் ஆகிய திடக்கழிவு மேலாண்மை பணிகளை Tipping Fee அடிப்படையில் 686 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வருட உயர்வு தொகை 10 சதவீதம் என்ற அடிப்படையிலும் செயல்படுத்தி வருகிறது.

11.12.2016 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததையொட்டி ஒப்பந்த அடிப்படையில் மனித சக்தி மட்டும் பெற்று துப்புரவு பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கக்கோரப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து அனுமதி வரப்பெறாததால் பொது நலன்கருதி மேற்படி தனியார் பராமரிப்பிற்கு 12.02.2016 முதல் 12.03.2017 வரை, 13.03.2017 முதல் 12.06.2017 வரை, 13.06.2017 முதல் 12.09.2017 வரை 13.09.2017 முதல் 12.10.2017 மற்றும் 13.10.2017 முதல் 12.01.2018 வரை கூடுதலாக கால நீட்டிப்பு செய்து மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis.No.7883/P3/2017, நாள். 02.08.2017 –ன் படி 373 பணியாளர்களை கொண்டு மனித சக்தி மட்டும் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய 777 லட்ச மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் 10.08.2017–ல் E-Tender மற்றும் மாநில செய்தி மலர் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு 20.09.2017 –ல் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இந்நிலையில் 20.09.2017–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை உயர்நீதிமன்ற மதுரை கிளை தடையாணை பிறப்பித்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண்.24 நாள்.28.02.2018 –ல் 13.01.2018 முதல் 12.04.2018 வரை மூன்று மாத காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டதை மன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்நிலையில் மேற்படி 20.09.2017–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை ரத்து செய்து நான்கு மண்டலங்களாக பிரித்து மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கையில் உள்ளது.

எனவே ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்ற அனுமதிபெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி தொடங்கும் வரை மேலும் மூன்று மாத கால அளவிற்கு 13.04.2018 முதல் 12.07.2018 வரை கால நீட்டிப்பு செய்திட அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.18831/2012/எச்1

**தீர்மானம் எண். 153– அங்கீகரிக்கப்பட்டது.**

**19.** இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்.TN74 AL 1924 –ல் A/c பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே அதனை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.16600/–க்கு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்க உத்தரவிற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.1767/2018/இ2

**தீர்மானம் எண். 154– அங்கீகரிக்கப்பட்டது.**

**20.** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிப்பிடம் இல்லாத வீடுகளில் தனி நபர் கழிப்பறை வசதி செய்யப்பட்டு பயன்படுத்த இயலாத கழிவறைகளை அகற்றிட அறிவுறுத்தப்பட்டமையால் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32, நகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. ராமசாமி ஐயர் நினைவு பூங்காவின் வெளிபுறத்தில் அமைந்துள்ள கழிவறையினை பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளது. நகராட்சி பூங்காவினுள் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் ஒரு கழிவறை பயன்பாட்டில் உள்ளதாலும் பழுது ஏற்பட்ட கழிவறையினை சரி செய்ய அதிகமாக செலவு ஏற்படும் என்பதாலும் மேற்படி கழிவறையினை இடித்து அப்புறப்படுத்த அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.5483/2018/இ3

**தீர்மானம் எண். 155– அங்கீகரிக்கப்பட்டது.**

21. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தையில் இடம் பெற்றுள்ள ஆறு பழக்காய் உறை குழிகளில் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் 2017–2018–ம் ஆண்டு ரூ.1,21,275/–க்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மேற்படி உறை குழிகள் பழுதடைந்து காணப்படுவதால் அவைகளை இடித்து அப்புறப்படுத்திடும் பொருட்டு 2018–2019–ம் ஆண்டு உரிம இன பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டிருந்தது.

தற்போது மேற்படி இனம் உடனடியாக இடிக்கப்படாததாலும், அதுவரை நகராட்சிக்கு வருவாய் ஈட்டிட இயலும் என்பதாலும் கடந்த ஆண்டு உரிமம் ஒப்படைக்கப்பட்ட தொகை ரூ.1,21,275/–லிருந்து 5 உயர்வு தொகை ரூ.1,27,339/–ஐ வரிகளுடன் அனுமதிக்கப்படும் வரை பிரதிமாதம் 5–ம் தியதிக்குள் தவணை முறையில் செலுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கடந்த ஆண்டு உரிமம் அனுபவித்த உரிமதாரர் திரு.S. விஜயகுமார், தெற்கு தாமரை குளம் அஞ்சல் அவர்களுக்கு தற்காலிகமாக ஒப்படைத்திட அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.1266/2017/அ14

**தீர்மானம் எண். 156– அங்கீகரிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31, தெற்கு ரதவீதி, கதவு எண்.46, வரிவிதிப்பு எண்.51886, திரு.நாகராஜன் மற்றும் இந்திரா பெயரில் உள்ள கட்டிடத்திற்கு வரி நிர்ணயம் செய்யப்பட்டது தொடர்பாக நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக்கி திரு.நாகராஜன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு W.P(MD) 7947/2018 –ற்கு நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் ஆஜராவதற்கும் மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.5196/2018/அ5

**தீர்மானம் எண். 157– அங்கீகரிக்கப்பட்டது.**

23. நாகர்கோவில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018 –ன் கீழ்கண்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி அவர்கள் செயல்முறை ஆணை எண்:ஆ3/4230/2017 நாள் 01.03.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 27.03.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| வ. எண் | மதிப்பீட்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தகாரர்கள் விபரம் | ஒப்பந்த விகிதம் | | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைவு | அதிகம் | |
| 1. | 166/2017–2018 | நாகர்கோவில் நகராட்சி– வார்டு எண்19–ல் சரக்கல்விளை விவேகானந்தா மின்சார வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்தல் | 2.00 | **T.ஹரிகிருஷ்ணன்** | **0.003** | | |

ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.T.ஹரிகிருஷ்ணன் மதிப்பீட்டை விட 0.003 குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்: இ3/ 14494/2016

**தீர்மானம் எண். 158– அங்கீகரிக்கப்பட்டது.**

24. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018 –ன் கீழ்கண்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி அவர்கள் செயல்முறை ஆணை எண்:ஆ3/2139/2017 நாள் 01.02.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 05.04.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| வ. எண் | மதிப்பீட்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தகாரர்கள் விபரம் | ஒப்பந்த விகிதம் | | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைவு | அதிகம் | |
| 1. | 168/2017 –2018 | நாகர்கோவில் நகராட்சி– வார்டு எண்20–ல் வண்ணான் விளை காமராஜர் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 | **எம்.ஹெப்சிபாய்** | **27.02** | | **33350/–** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | 169/2017 –2018 | நாகர்கோவில் நகராட்சி– வார்டு எண்22–ல் கீழ வண்ணான் விளையில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின் விசை திட்டம் அமைத்தல் | 2.50 | **எம்.ஹெப்சிபாய்** | **27.02** | | **33350/–** |
| 3. | 170/2017 –2018 | நாகர்கோவில் நகராட்சி– வார்டு எண்20–ல் என்.ஜி.ஓ காலனி காமராஜர் நகரில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 | **எம்.ஹெப்சிபாய்** | **27.02** | | **33350/–** |
| | | | | எஸ்.றி. மணிகண்டன் | 21.00 | | |
| 4. | 171/2017 –2018 | நாகர்கோவில் நகராட்சி– வார்டு எண்4–ல் எம்.எஸ்.ரோடு தெலுங்கு செட்டி தெருவில் உள்ள பார்க்கில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் | 5.00 | **கே.மணிகண்டன்** | **17.50** | | **29600/–** |
| 5. | 172/2017 –2018 | நாகர்கோவில் நகராட்சி– தம்மத்து கோணம் முத்தாரம்மன் கோவில் செல்லும் சாலையில் தார்சாலை அமைத்தல் | 6.00 | **எம்.ஹெப்சிபாய்** | **42.53** | | **126900/–** |
| | | | | எஸ்.பால்நேசமணி | 34.53 | | |
| | | | | நடராஜன் | 32.00 | | |
| | | | | தங்கசாமி | 30.00 | | |
| | | | | எஸ்.றி. மணிகண்டன் | 28.50 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வி.குமார் | 25.00 | | |
| | | | | மணிகண்டன் | 24.99 | | |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண் (1) முதல் (6) வரை குறிப்பிட்ட பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அதற்கு எதிரே குறிப்பிட்ட கூடுதல் வைப்பு தொகைகளை செலுத்திய பின்னர் பணி உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: இ3/ 7072/2017

**தீர்மானம் எண். 159– அங்கீகரிக்கப்பட்டது.**

25. இந்நகராட்சி பகுதியில் அடல் நகரிய சீர்திருத்த திட்டம் (AMRUT) 2017–2020 –ன் கீழ் ராஜீவ் நகர் பூங்காவினை விளையாட்டு உபகரணங்களுடன் புனரமைத்திட TUFIDCO/AMRUT/816/AM(M)2017 நாள்20.11.2017–ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது .அதன் படி கடந்த 16.03.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.குமார் | மதிப்பீட்டை விட 20.14% குறைவு |
| 2 | திரு.கே.கைலாஷ்குமார் | மதிப்பீட்டை விட 15.18% குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு. ஆர்.குமார் 20.14% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று,கூடுதல் வைப்புத் தொகை ரூ.2,92,000/– னை செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு

மதிப்பீட்டு எண்: 34/ 2017– 2018/REE

**தீர்மானம் எண். 160– அங்கீகரிக்கப்பட்டது.**

26. இந்நகராட்சி பகுதியில் அடல் நகரிய சீர்திருத்த திட்டம் (AMRUT) 2017–2020 –ன் கீழ் V.N.காலனி பூங்காவினை விளையாட்டு உபகரணங்களுடன் புனரமைத்திட TUFIDCO/AMRUT/816/AM(M)2017 நாள்20.11.2017–ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது .அதன் படி கடந்த 16.03.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம்.ஹெப்சிபாய் | மதிப்பீட்டை விட 20.88% குறைவு |
| 2 | திரு.ஆர்.குமார் | மதிப்பீட்டை விட 6.70% குறைவு |
| 3 | திரு.கே.கைலாஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.67% குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு. எம்.ஹெப்சிபாய் 20.88% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்புத் தொகை ரூ.2,99,800/– னை செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு

மதிப்பீட்டு எண்: 33/ 2017– 2018/REE

**தீர்மானம் எண். 161– அங்கீகரிக்கப்பட்டது.**

27. இந்நகராட்சிக்கு சொந்தமான கலைவாணர் கலையரங்க வளாகத்தில் புதிதாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறை கடிதம் எண்.15040/2017/இ1, நாள்.13.04.2018–ன் படி இடைவெளி நிரப்புதல் திட்டம் 2017–18–ன் கீழ் ரூ.450 இலட்சம் மானியமாகவும் 50 லட்சம் ULB – Contribution நிதியாகவும் மொத்த ரூ.500.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: இ1/7558/2017

**தீர்மானம் எண். 162– அங்கீகரிக்கப்பட்டது.**

28. இந்நகராட்சிக்குட்பட்ட வடசேரி கிராமம் நகரளவு எண்.B3/72–ல் கதவு எண்.1 முதல் 44–ல் கூடுதலாக செவிலியர் பயிற்சி கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதத்தில் சில சிறப்பு நிபந்தனை மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்க இசைவு அளித்துள்ளதாகவும். மேலும் இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபட நகலில் பொது ஒதுக்கீடு திறவிடம் 3400 ச.மீ மற்றும் மேற்படி பொது ஒதுக்கீடு தீறவிடம் செல்லும் சாலை ஆகியவைகளை தானமாக பெற்று

அதன்விபரத்தினை உறுப்பினர் செயலர் (பொ) உள்ளூர் திட்ட குழுமம், நாகர்கோவில் அவர்கள் தமது கடிதம் ந.க.எண்.225/2016/நா.உ.தி.கு நாள்.05.04.2018 கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், ஆட்சியாளர் காதரின் பூத் மருத்துவமனை, நாகர்கோவில் அவர்களும் தமது 16.04.2018–ம் தேதிய கடிதத்தில் பொது ஒதுக்கீடு திறவிடம் 3400 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடம் செல்லும் சாலைக்கான பகுதி ஆகியவைகளை நகராட்சிக்கு தானமாக பத்திர பதிவு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, நகராட்சிக்குட்பட்ட நகரளவு எண். B3/72–ல் கதவு எண். 1 முதல் 44–ல் கூடுதலாக செவிலியர் பயிற்சி கல்லூரி மருத்துவமனை கட்டிடம் கட்ட பொது ஒதுக்கீடு திறவிடம் 3400 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடம் செல்லும் சாலைக்கான பகுதிகளை தானப்பத்திரம் மூலம் ஆணையர் அவர்கள் பெயருக்கு பதிவு செய்து நகராட்சிக்கு வழங்க அங்கீகாரத்திற்காக.

க.வி. எண்: 218/2017/எப்2

**தீர்மானம் எண். 163– அங்கீகரிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சிக்குட்பட்ட நீண்ட கரை 'ஏ' கிராமம் நில அளவை எண்கள் 163/3A1 A (Pt) 3A1B, 3A2, 3B, 3C–ல் 400 ச.மீ பரப்பளவில் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் Layout Frame work ம.வ (மு) நா.உ.தி.கு எண்.18/2018 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு வரைபடம் இணைத்து நாகர்கோவில் உள்ளூர் திட்ட குழுமம் கடிதம் ந.க.எண்.203/2018 நா.உ.தி.கு நாள்.18.04.2018 வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைப்பிரிவை வரன்முறைபடுத்த பொது ஒதுக்கீடு மற்றும் சாலையை நகராட்சிக்கு பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய கூறப்பட்டுள்ளதால் பொது ஒதுக்கீடு (10.01) பரப்பளவான 25.50 ச.மீ நிலத்தையும், சாலைப்பரப்பு 125.35 x 5.18=649.31, 650 ச.மீ நிலத்தை பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் நகராட்சிக்கு பெற அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: எப்1/5929/2018

**தீர்மானம் எண். 164– அங்கீகரிக்கப்பட்டது.**

**30.** தமிழ்நாடு மறு வரையறை ஆணையம் – சென்னை – அவர்களின் மின் அஞ்சல் கடிதம் ந.க.எண்.3174/2017/EG1 நாள். 13.02.2018 –ன் படி நாகர்கோவில் நகராட்சி வார்டுகள் 52லும் இறுதி மறு வரையறை கருத்துக்கள் சமர்பிக்கும் பொருட்டு 52 வார்டுகளுக்கான வரைபடங்கள் A3 மற்றும் A2 கலர் பிரிண்ட்டுகள் எடுக்க அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | Heaven Makers Construction<br>Er.P. Inthuja | Rs. 7,960 |
| 2. | S.K.Associates<br>Er. P. Saravanakumar | Rs. 9000 |
| 3. | Himalaya Construction<br>Er. K. Ashok Kumar | Rs. 8686 |

மேற்படி பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Heaven Makers Construction Er.P. Inthuja நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி உத்தரவு வழங்கியதையும், மேற்படி வரைபடங்கள் Print எடுத்து இறுதி கருத்துருக்கள் மாநில மறு வரையறை ஆணையத்திற்கு சமர்பிக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: எப்1/14260/2017

**தீர்மானம் எண். 165– அங்கீகரிக்கப்பட்டது.**

**31.** இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்.TN74J2839–க்கு AC பழுதாகி உள்ளதால் அதனை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.11,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: இ2/5021/2006

**தீர்மானம் எண். 166– அங்கீகரிக்கப்பட்டது.**

**32.** இந்நகராட்சி வாகனம் TN74 E 6583–ல் உள்ள நான்கு எண்ணம் கொண்ட டயர்களும் டியூப்களும் மற்றும் மின்கலப்பெட்டியும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் புதியதாக பொருத்துவதற்கான செலவினம் ரூபாய்.25,000/–க்கு அனுமதிவேண்டி அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: இ2/10355/2007

**தீர்மானம் எண். 167– அங்கீகரிக்கப்பட்டது.**

33. இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி வந்த திரு.S.R.சந்திரன் என்பவரை ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டது. அன்னார் ஓய்வூதிய பலன்கள் வழங்க கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.10253/2018 எண்ணில் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கின் மீது நகராட்சி சார்பில் ஆஜராகும் பொருட்டு திரு.ஆனந்த், அரசு வழக்கறிஞரிடம் ஒப்படைத்தமைக்கும், அதற்குண்டான வழக்கு செலவினங்களுக்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்: எச்1/14681/2016

**தீர்மானம் எண். 168– அங்கீகரிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட சுப்பையார் குளம் மாசுபடுவதை தவிர்க்கும் பொருட்டு, சுப்பையார் குளம் பாதுகாப்பு இயக்கம் மூலம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொது நல வழக்கு எண்.WP(MD) No.2571/2018 எண்ணில் தொடரப்பட்ட வழக்கின் மீது நகராட்சி சார்பில் ஆஜராகும் பொருட்டு திரு.A.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞரிடம் ஒப்படைத்தமைக்கும், அதற்குண்டான வழக்கு செலவினங்களுக்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்: எச்1/3811/2018

**தீர்மானம் எண். 169– அங்கீகரிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சியில் கீழ்கண்ட பணியாளர்கள் ஓய்வுப்பெற்றுள்ளனர்

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | ஓய்வுப் பெற்ற நாள் | சி.சே.ந.நிதி சந்தா | சி.சே.ந.நிதி வட்டி | நகராட்சி பங்கு தொகை ரூ. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.கணபதி /நயினார், து.ப | 30.04.2018 | 2960 | 5889 | 10,000/– | 18,849/– |
| 2 | திருமதி.மிக்கேலம்மாள் / மரிய பிரான்சிஸ் S.W | 13.12.2017 | 2960 | 10565 | 10,000/– | 23,525/– |
| 3 | திரு.ஜானகிராமன், மு.நி.ந.அ | 31.03.2018 | 2960 | 20902 | 10,000/– | 33,862/– |
| 4 | திரு.விக்டர்பெர்னாண்டோ து.ஆ | 31.03.2018 | 2960 | 19959 | 10,000/– | 32,919/– |
| | | | **11840** | **57315** | **40,000/–** | **1,09,155/–** |

மேற்படி பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் நிர்வாக பங்குத்தொகை தலா ரூ.10000/– ம் வழங்குவதற்கும் வட்டித்தொகையை நகராட்சி வருவாய் நிதி கணக்கிலிருந்து வழங்குவதற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.13120/2018/பி1

**தீர்மானம் எண். 170– அங்கீகரிக்கப்பட்டது.**